பக்கங்கள் - 08
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii




E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 20 ஞாயிற்றுக்கிழமை (05.04.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 108

### 5ஆவது நபரும் கொரோனாவால் மரணம்
## உயிரிழந்தவர் வேறு எந்தவொரு நோயினாலும் பாதிக்கப்படவில்லை – சுகாதார அமைச்சு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் (கோவிட் 19) தொற்றுக்குள்ளான நிலையில் வெலிகந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இதன்மூலம் கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கையில் பதிவான 5ஆவது உயிரிழப்பு இதுவாகும்.

கொரோனா தொற்றால் உயிரிழந்தவர் வேறு எந்தவொரு நோயாலும் பாதிக்கப்படாதவர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

இத்தாலி நாட்டிலிருந்து திரும்பிய ஹோமாகமவைச் சேர்ந்த 44 வயதுடைய 02

### கொரோனாவால்
## மீசாலையைச் சேர்ந்தவர் பிரித்தானியாவில் பலி

(லண்டன்)

கொரோனா வைரஸால் பிரித்தானியாவில் மீசாலையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான கிருஷ்ணசாமி சியாமளன் (வயது-42) என்பவரே நேற்று உயிரிழந் 02

### 14 நாட்கள் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டு
# கண்காணிப்பை நிறைவு செய்து வீடு திரும்பியவருக்கும் கொரோனா
### 10 நாட்களின் பின் தொற்று கண்டறியப்பட்டது

***(கொழும்பு)***

***வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பி 14 நாட்கள் தனிமைப்படுத்தல் நிலையத்தல் தங்கவைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வீடு திரும்பியவருக்கு 10 நாட்களின் பின் கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.***

கடந்த மார்ச் 10ஆம் திகதி தென் கொரியாவிலிருந்து நாடு திரும்பிய அவர், கந்தக்காடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் 14 நாட்கள் தங்கவைக்கப்பட்டு கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து கடந்த 24ஆம் திகதி அவர், மத்துகமவிலுள்ள தனது வீட்டுக்குத் திரும்பியுள்ளார்.

இந்த நிலையில் 10 நாட்களின் பின்னர் அவருக்கு ஏற்பட்ட உடல் நிலை மாற்றத்தால் களுத்துறை நாகொட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார்.




அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனா வைரஸ் (COVID-19) தொற்றுள்ளமை உறு 02

### நாயினால் கருத்து முரண்பாடு
## முல்லையில் இளைஞன் ஒருவர் அடித்துப் படுகொலை



(முல்லைத்தீவு)

நாயினால் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டையடுத்து முல்லைத்தீவு குமுழமுனை பகுதியில் இளைஞன் ஒருவர் அடித்து படுகொலை செய்யப்பட்டுள்ளார். 02

## ஊரடங்கு சட்டக்காலப்பகுதியில் சீவல் தொழிலில் ஈடுபட அனுமதி

(கொழும்பு)

ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும், சீவல் தொழிலில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை பனை அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இந்த அனுமதி தொடர்பில் துறை சார் அமைச்சருடன் கலந்துரையாடி தேவையான ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளதாக இலங்கை பனை அபிவிருத்தி சபையின் தலைவர் கிருஷாந்த பத்திராஜ குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கு 03

## கொழும்பு முழுவதையும் முடக்க தீர்மானம்?
### உயர்மட்டத்தில் ஆலோசனை

(கொழும்பு)

கொழும்பு முழுவதையும் முடக்க உயர்மட்டத்தில் ஆலோசனை நடத்தப் 02

# 166

(கொழும்பு)

கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் மேலும் 07 பேர் நேற்று சனிக்கிழமை அடையாளம் காணப் 02

## புத்தாண்டு வரை கொரோனா ஒழிப்பு நடவடிக்கை தொடரும்
### ஜனாதிபதி கூட்டத்தில் இணக்கம்

(கொழும்பு)

புத்தாண்டு நிறைவுறும் வரை கொரோனா ஒழிப்பு தற்போதைய நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் சென்று பின்னர் நிலமையை ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்க கலந்துரை 02

### கொரோனா தொற்றாளர்களுடன் பழகியவர்களை
## மீண்டும் மீண்டும் கடுமையாக பரிசோதனைக்கு உட்படுத்துக
### ஜனாதிபதியின் கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள், தொற்றுக்குள்ளானவர்கள் என சந்தேகிக்கப்படுபவர்கள் மற்றும் அவர்களுடன் பழகியவர்களை 02

## 2961 சிறைக்கைதிகள் பிணையில் விடுதலை
### தமிழ் அரசியல் கைதிகள் எவருமில்லை

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவின் பரிந்துரையின்படி நீதி மன்ற உத்தரவில் 03

## முல்லையில்...

இச் சம்பவத்தில் குமுழமுனை பகுதியை சேர்ந்த இராசலிங்கம் ரமேஷ் (வயது-26) என்ற இளைஞனே அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

பக்கத்து வீட்டு நாயொன்று குறித்த இளைஞன் வீட்டிற்குள் சென்று சாப்பாட்டை திருடி சென்றுள்ளது.

அதனால் குறித்த இளைஞன் நாயினை கட்டிவைத்து அடித்து துன்புறுத்தியுள்ளான். அதனை பார்த்த பக்கத்து வீட்டுக்காரர் இளைஞனை பேசியுள்ளனர் இதனால் இருவருக்கிடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டு கைகலப்பாக மாறியுள்ளது.

இவ் மோதலில் படுகாயமடைந்த குறித்த இளைஞன் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ் போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக மாற்றப்பட்டு அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு மரணமடைந்துள்ளார்.

குறித்த இளைஞனின் மரணத்தை தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட முல்லைத்தீவு பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மூன்று குடும்பத்தை சேர்ந்த 12 பேரை கைது செய்து விசாரணைக்காக அழைத்து சென்றுள்ளனர். (ம-3,114,281)

## மீசாலையைச்...

துள்ளார்.

உயிரிழந்தவருக்கு 2 வயது மற்றும் 6 மாதத்தில் மகன்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மீண்டும் மீண்டும்...

மீண்டும் மீண்டும் கடுமையான பரி சோதனைக்கு உட்படுத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் (கோவிட் 19) நாட்டினுள் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக அரசு நடைமுறைப்படுத்தியுள்ள நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்மானிப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அநுருத்த பாதெனிய வைரஸின் உலகளாவிய பரவல் மற்றும் அதனை கட்டுப்படுத்துவதற்காக அரசு மேற்கொண்ட செயற்பாடுகளின் முன்னேற்றம் குறித்து விளக்கினார்.

நாட்டினுள் வைரஸ் தொற்று கண்டறியப்பட்ட முதல் சந்தர்ப்பத்திலேயே ஜனாதிபதி தலைமையில் அரசு மேற்கொண்ட உடனடி நடவடிக்கைகளின் காரணமாக இந்த சுகாதார பிரச்சினை கட்டுப்பாட்டை மீறிச் செல்ல இடமளிக்காது முகாமைத்துவம் செய்ய முடியுமாக இருந்ததாக இங்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் தலைமையில் அரசு இதுவரையில் செயற்பட்டதைப் போன்று வைரஸை ஒழிக்க தொடர்ந்தும் சுகாதார, மருத்துவ, பாதுகாப்பு மற்றும் சட்டம் உள்ளிட்ட குறித்த துறைகளின் நிபுணர்களின் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

நோயின் உலகளாவிய பரவலை கண்காணித்து உலக சுகாதார நிறுவனம் அவ்வப்போது செய்யும் பரிந்துரைகளை ஆராய்ந்து பொருத்தமான வகையில் பின்பற்றுவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்படும். தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள கொரோனா ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை மேலும் முறையாக தொடர்ந்தும் முன்னெடுக்க கலந்துரையாடலில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

தொற்றுக்குள்ளானவர்கள், தொற்றுக்குள்ளானவர்கள் என சந்தேகிக்கப்படுபவர்கள் மற்றும் அவர்களுடன் பழகியவர்களை மீண்டும் மீண்டும் கடுமையான பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

தொற்றை கட்டுப்படுத்துவதில் வெற்றி கண்ட ஏனைய நாடுகளும் இத்தகைய நடைமுறைகளையே பின்பற்றியுள்ளன. தொற்றுக்குள்ளானவர்கள் மற்றும் அவர்களுடன் பழகியவர்களை சரியாக இனம் காண முடிந்திருப்பதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க, முன்னாள் ஆளுநர் மருத்துவர் சீதா அரம்பேபொல, பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா, பதில் பொலிஸ் மா அதிபர் சீ.டீ.விக்ரமரத்ன, அரச மருத் துவ அதிகாரிகளின் சங்கத்தின் அதிகாரிகள், தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப நிறுவனத்தின் தலைவர் ஜயன்த டி சில்வா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-3)

## புத்தாண்டு...

யாடப்படும்.

அத்துடன், கொரோனா நோயாளிகள் இனங்காணப்படாத மாவட்டங்களில் நோய் பரவும் அச்சுறுத்தல் தற்போது இல்லை. எதிர்வரும் புத்தாண்டு காலம் நிறைவுறுவதுடன் இடர் நிலைமை இல்லாத மாவட்டங்களில் தற்போது நடைமுறையிலுள்ள கட்டுப்பாடுகளை நீக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற நேற்றைய கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கோவிட் 19 என்னும் கொரோனா வைரஸ் நாட்டினுள் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக அரசு நடைமுறைப்படுத்தியுள்ள நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்மானிப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கொரோனா நோயாளிகள் அதிகம் கண்டறியப்பட்டுள்ள சில மாவட்டங்கள் தவிர பெரும்பாலான மாவட்டங்களில் நோய் பரவும் அச்சுறுத்தல் தற்போது இல்லை. எதிர்வரும் புத்தாண்டு காலம் நிறைவுறுவதுடன் இடர் நிலைமை இல்லாத மாவட்டங்களில் தற்போது நடைமுறையிலுள்ள கட்டுப்பாடுகளை நீக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது.

எனவே புத்தாண்டு நிறைவுறும் வரை கொரோனா ஒழிப்பு தற்போதைய நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் சென்று பின்னர் நிலைமையை ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்க கலந்துரையாட இணக்கம் காணப்பட்டது.

ஜனாதிபதியின் தலைமையில் அரசு இதுவரையில் செயற்பட்டதைப் போன்று வைரஸை ஒழிக்க தொடர்ந்தும் சுகாதார, மருத்துவ, பாதுகாப்பு மற்றும் சட்டம் உள்ளிட்ட குறித்த துறைகளின் நிபுணர்களின் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் என்றுள்ளது. (ம-3)

## உயிரிழந்தவர்...

வரே நேற்று அதிகாலை வெலிக்கந்தை வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

இத்தாலியிலிருந்து மார்ச் மாத முற்பகுதியில் நாட்டுக்கு வருகை தந்த அவர், தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டார்.

கடந்த 23ஆம் திகதி கொரோனா தொற்றுக்குள்ளாகியதாக வெலிகந்தை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவரது உடல்நிலை கடுமையானதால் அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

எனினும் அவரது உடல்நிலை கவலைக்கிடமான நிலைக்குச் சென்ற நிலையில் நேற்று சனிக்கிழமை அதிகாலை உயிரிழந்தார்.

அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுத் தவிர்ந்த வேறு எந்தவொரு நோய் தாக்கமும் இல்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜெயசிங்க தெரிவித்தார். (ம-3)

## கண்காணிப்பை...

திப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால் அந்த நபர் தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலைக்கு (ஐ.டி.எச்) சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளார். (ம-3)

## கொழும்பு முழு...

பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகளவில் கொழும்பில் வசிப்பதனால் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 166...

பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுத் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 166ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது. (ம-3)

# மரண அறிவித்தல்



## பொனிப்பாஸ் பிலிப் (சிலுவைதாஸ்)

பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொனிப்பாஸ் பிலிப் (சிலுவைதாஸ்) நேற்று (04.04.2020) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொனிப்பாஸ் - கமலம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான சிங்கராயர் - மரியம்மாவின் மருமகனும் கிறிஸ்ரீனம்மாவின் (குண்டுமணி) பாசமிகு கணவரும் கனிஸ்ரா (லண்டன்), காலஞ்சென்ற அசம்ரா, எயுஸ்ரா, ரஞ்சித் (பிரான்ஸ்), சூட்டி, ஷாமினி (ஜீவித்தா) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்றூ (லண்டன்), தாசிஸ் (பெர்னாண்டோ), டினேஸ், ஸ்ரெபானி (பிரான்ஸ்), மீனா ஆகியோரின் மாமனாரும் விஜய், நொலான்சி, ஜயந், யுக்கேரியன்ஸ், டெவ்னி, ஸ்ரிபனி (லண்டன்), ஷியோலா (பிரான்ஸ்), மல்கின் (பிரான்ஸ்), ஹாஷன் (பிரான்ஸ்), ரிக்ஷி, லித்வின், ஹர்ஷினி, அருட்ஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் லியான்றோவின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (05.04.2020) பி.ப 3.30 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித அந்தோனியார் ஆலயத்தில் இறுதிச் சடங்கு முடிவடைந்த பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

பாஷையூர்.




இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.04.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

## 2,961 சிறைக்...

2 ஆயிரத்து 691 கைதிகள் மற்றும் விளக்க மறியல் சந்தேக நபர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் ஜனாதிபதியால் கூறப்பட்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகளும் உள்ளடக்கப்பட வேண்டிய நிலையில் அவர்கள் எவருக்கும் பிணை வழங்கப்படவோ, பொதுமன்னிப்பளிக்கப்படவோ இல்லை.

மார்ச் மாதம் 17ஆம் திகதி முதல் நேற்று வரையான காலப்பகுதியில் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி சிறைச்சாலை வளாகத்திற்கு மேற்கொண்ட கண்காணிப்பு பயணத்தின் போது கைதிகள் - சந்தேகநபர்கள் அவரிடம் முன்வைத்த கோரிக்கையின் பேரில் நிவாரணம் வழங்குவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், நீதி அமைச்சு, சிறைச்சாலைகள் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகளை கொண்ட குழு கைதிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கான பரிந்துரையை ஜனாதிபதியின் செயலாளரிடம் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஊரடங்கு சட்ட...

மாகாணங்களில் 1500 தொடக்கம் 2000 குடும்பங்கள் பனையேறி தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்கின்றனர். சில நாட்கள் பனையேறி சீவலில் ஈடுபடாவிட்டால் பனை பழுதடைந்து அழியும் நிலை ஏற்படும்.

ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் தொழிலில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் அவர்களுக்கு அனுமதியை வழங்குமாறு நான் கோரிக்கை விடுத்திருந்தேன்.

அமைச்சர் விமல் வீரவன்ஸவின் பணிப்பின் பேரில் யாழ். மாவட்ட அரச அதிபர், கலால் திணைக்கள பணிப்பாளர் அதே போன்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் மாவட்ட செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடி சீவல் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு நாங்கள் விசேட அனுமதியைப் பெற்றுக் கொடுத்துள்ளோம் என கிருஷாந்த பத்திராஜ தெரிவித்தார்.

இதேவேளை, இறக்கப்படும் கள்ளை தனியார் அல்லது பொது இடங்களில் விற்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு விற்பனை செய்யப்பட்டால் அந்த இடங்களில் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸாரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், கள்ளு சேகரிப்பு நிலையங்களில் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும். (ம-3)

# ஆராதனையில் கலந்து கொண்டு மறைந்துள்ளவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்)

கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி அரியாலை தேவாலயத்தில் இடம்பெற்ற மத ஆராதனையில் கலந்துகொண்டவர்கள் தற்பொழுது சுய தனிமைப்படுத்தப்பட்டு உள்ளார்கள் மத ஆராதனையில் கலந்து கொண்டு தங்களை இனங்காட்டாது மறைந்து இருப்பவர்களை பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அல்லது அவர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் தமக்கு தெரியப்படுத்துமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தாவடியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் 18 பேருக்கு நேற்று கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது இன்று மாலை பரிசோதனை அறிக்கை வெளிவரும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-3,114)

# சிவப்பு எச்சரிக்கை

இலங்கையில் சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் எதிர்வரும் 14ஆம் திகதி வரையில் சூரியன் அகலாங்குகளுக்கு மேலாக உச்சம் கொடுக்கவுள்ளதாக வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித் துள்ளது.

இதேவேளை, சப்ரகமுவ, மேல், வட மேல், மத்திய, தென் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் பிற்பகல் 2 மணிக்குப் பிறகு மழை பெய்யும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# கொரோனா COVID - 19

## இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை

| நோய்த் தொற்று சந்தேகத்தில் | தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் |
|---|---|---|---|
| 252 | 166 | 027 | 005 |

## உலகளாவிய ரீதியில் நாளாந்த நிலைமை ஒரே பார்வையில்...

| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 1,188,486 | 244,448 | 64,103 |

| நாடுகள், உலகம் | மொத்த பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | மொத்த மரணம் | இன்றைய மரணம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 1,188,486 | 71,843 | 64,103 | +4,933 |
| அமெரிக்கா | 302,919 | 25,758 | 8,243 | +839 |
| இத்தாலி | 124,632 | 4,805 | 15,362 | +681 |
| ஸ்பெய்ன் | 124,736 | 5,537 | 11,744 | +546 |
| சீனா | 81,639 | 19 | 3,326 | +4 |
| ஜேர்மனி | 95,637 | 4,478 | 1,395 | +120 |
| பிரான்ஸ் | 89,953 | 7,788 | 7,560 | +1,053 |
| ஈரான் | 55,743 | 2,560 | 3,452 | +158 |
| இங்கிலாந்து | 41,903 | 3,735 | 4,313 | +708 |
| இந்தியா | 3,082 | 23 | 86 | 0 |

இன்று அதிகாலை 12.45 நிலைவரைப்படி

# உலகளாவிய நோய்த் தொற்றைப் பயன்படுத்தி கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் இலங்கை

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் அதிருப்தி

(ஜெனிவா)

**உலகளாவிய நோய்த் தொற்றைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் கருத்து சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகின்றது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் அதிருப்தி வெளியிட்டது.**




சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் தென்னாசியாவிற்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா வைரஸைக் கட்டுப் படுத்தும் நடவடிக்கைகளில் ஈடு படும் அதிகாரிகளை விமர்சிப்பவர்களைக் கைதுசெய்யுமாறு பதில் பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டார், வைரஸ் தொற்று குறித்து போலியான தகவல்களைப் பரப்புபவரகளைக் கைதுசெய்யுமாறும் அவர் உத்தரவிட்டார்.

உலகளாவிய நோய்த் தொற்று என்பது அதிகாரிகளுக்குச் சவாலாக உள்ளது. அவர்கள் உரிய சுகாதார நடவடிக்கைகள் மூலம் மக்களைப் பாதுகாக்க முயல்கின்றனர்.

ஆனால், விமர்சனங்கள் அவர்களின் நடவடிக்கைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது, சில விமர்சனங்கள் நீதியானவையாக, நிலைமையை மேலும் தீவிரப்படுத்துபவையாகக் காணப்பட்டாலும், விமர்சனங்களால் அதிகாரிகளின் நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் பாதிப்பு ஏற்படாது.

முழுமையான தணிக்கையும், கருத்துக்கள் பேச்சுக்களுக்காக



நபர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என்ற அச்சுறுத்தலும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் கீழ் இலங்கைக்குள்ள கடப்பாடுகளை மீறும் செயல் என்பதுடன் அவை எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துபவையாக மாறக் கூடும்.

தகவல்களை மறைப்பதன் மூலம், தணிக்கை செய்வதன் மூலம் அதிகாரிகளுக்குத் தங்களின் நடவடிக்கைகளில் காணப்படும் குறைபாடுகள் தெரியவருவது தடுக்கப்படும், அவர்கள் அவற்றை அறியமுடியாத நிலை காணப்படும்.

ஊரடங்கு உத்தரவின் போதும் முடக்கல்களின் போதும் மக்கள் தங்களின் அத்தியாவசிய தேவைகளைப் பெறுவதற்கான உதவிகள் அவசியம்.

அவர்கள் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலை காணப்படவேண்டும்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு தொடர்பான நடவடிக்கைகளை கையாள்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய, இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவை நியமித்ததன் காரணமாக இலங்கையர்கள் மத்தியில் தங்கள் உரிமைகள் குறித்து காணப்படும் கரிசனைகள் மதிக்கப்படவேண்டும்.

கொவிட் - 19 பரவுவதைத் தடுப்பதற்கான இலங்கையின் தேசிய நடவடிக்கை நிலையத்தின் தலைவராக போர்க் குற்றச்சாட்டுக்களுக்குள்ளான இராணுவத் தளபதி சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டார்.

மிக நீண்ட காலமாக பாதுகாப்புப் படையினரின் துஷ்பிரயோகங்களை எதிர்கொண்ட தமிழர்கள் முஸ்லிம்கள் மற்றும் அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் தங்களுடைய அரசியல் சிவில் உரிமைகள் மதிக்கப்படப்போவதில்லை என கரிசனை கொண்டிருக்கக்கூடும்.

வைரஸ் தொற்று குறித்தும் சேவைகள், சேவைகளை தடுக்கும் குழப்பங்கள் உட்பட இது தொடர்பான அனைத்து விடயங்கள் குறித்தும் துல்லியமான உடனடித் தகவல்களை அனைவரும் பெறுவதை உறுதி செய்வதே உரிமைகளை மதிக்கும் நடவடிக்கையாக விளங்கும்.

உலகளாவிய நோய்த் தொற்றின் போது கருத்து சுதந்திரத்திற்கான உரிமைகளை உறுதி செய்யத் தவறுவது அடிப்படை உரிமைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் நம்பிக்கையின்மையை உருவாக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## ஊரடங்கு உத்தரவை மீறிய 30 பேர் வவுனியாவில் கைது

(வவுனியா)

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஊரடங்கு சட்டம் காரணமாக வவுனியா மாவட்டம் முற்றாக முடங்கியது.

இந்நிலையில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டதுடன், அத்தியாவசிய தேவைகள் நிமித்தம் வெளியில் செல்வோரை தவிர ஏனையவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

ஊரடங்கின் போது தேவையற்ற விதமாக நடமாடியதாக நேற்று முன்தினம் 16 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை கடந்த மூன்று நாட்களில் மாத்திரம் 30 இற்கும் மேற்பட்டவர்கள் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (இ-299)

# சோதனைச் சாவடியில் கசீஸ் போதைப்பொருள் பல இலட்சம் ரூபாய் பணத்துடன் இருவர் கைது





(மன்னார்)

மன்னார் பிரதான பாலத்தடியில் அமைந்துள்ள இராணுவத்தினரின் சோதனைச் சாவடியில் வைத்து கசீஸ் போதைப் பொருளுடன் இருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 11.20 மணியளவில் கைது செய்யப்பட்டனர்.

மன்னாரிலிருந்து கொழும்பிற்கு கடல் உணவுப்பொருட்களை ஏற்றிக்கொண்டு சென்ற கூலர் ரக வாகனம் குறித்த பொருட்களை இறக்கி விட்டு மீண்டும் மன்னார் நோக்கி வந்தது.

இதன் போது மன்னார் பிரதான பாலத்தடியிலுள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து இரவு 11.20 மணியளவில் குறித்த கூலர் வாகனம் இராணுவத்தினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன் போது குறித்த வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 65.9 கிராம் கசீஸ் போதைப் பொருள், பல இலட்சம் ரூபாய் பெறுமதியான நாணயத்தாள்கள், மற்றும் மதுபானப் போத்தல் என்பன மீட்கப்பட்டதோடு குறித்த கூலர் வாகனத்தின் சாரதி உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள் என இராணுவத்தினர் தெரிவித்தனர்.

குறித்த கூலர் வாகனம் அத்தியாவசிய உதவி என்ற அடிப்படையில் பாஸ் நடைமுறையூடாக கடல் உணவுகளை கொழும்பிற்கு கொண்டு சென்று வந்தமை தெரிய வருகின்றது.

கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் மீட்கப்பட்ட போதைப் பொருள், பணம், மதுபானம் மற்றும் வாகனம் ஆகியவை இராணுவத்தினரால் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# கொரோனா வைரஸால் இறப்பவர்களின் சடலங்களை எரிப்பதா? புதைப்பதா?

## வைத்தியர் அனில் ஜாசிங்க தெளிவுபடுத்தல்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் உடல் புதைக்கப்பட்டால் மண் மூலம் வைரஸ் பரவக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் செயற்பட வேண்டிய முறை தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் முன்னரே அறிவித்துள்ளது. அதற்கேற்பவே உயிரிழந்தவர்களின் சடலங்களை தகனம் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெளிவுபடுத்துகையில்,

முன்னாள் பிரதமர் ரணில் மற்றும் மேலும் சில முன்னாள் அமைச்சர்கள் கொரோனா தடுப்பு பரிசோதனைகள் பற்றிக் கருத்துத் வெளியிட்டுள்ளனர்.

ஆரம்பத்திலேயே வைரஸ் நாட்டுக்குள் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எம்மால் முன்னெடுக்கப்பட்டன. எனினும் நாட்டினுள் வைரஸ் பரவ ஆரம்பித்த பின்னர் அது மேலும் விரிவடையாமல் தடுப்பதற் கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

உதாரணமாக கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியை எடுத்துக் கொண்டால் ஆரம்பத்தில் அதனைப் பார்ப்பதற்கான அனுமதி பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதிலேயே நாம் கவனம் செலுத்துவோம்.

அதனை விடுத்து ஆரம்பத்திலேயே கிரிக்கெட் விளையாட எத்தணிக்க மாட்டோம். மேலதிக பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கூறப்படும் நடைமுறைகள் இதுபோன்ற இரண்டாவது கட்டமேயாகும்.

நாம் எவ்வாறு வைரஸுடன் போராடுவது என்பது பற்றி தற்போது ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த அனைத்து காரணிகளையும் எடுத்துக் கொள்ளும் போது இந்த வைரஸ் சமூகத்திற்குள் மேலும் பரவுவதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் இடமளிக்க முடியாது.

கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டு 3 மாதங்களாகின்றன. எனினும் இந்த வைரஸின் தன்மை மற்றும் செயற்பாடுகள் குறித்து இதுவரையில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் வெளியாகவில்லை.

எனினும் வைரஸ் பரவும் வேறு வழிமுறைகள் பற்றித் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் வைரஸ் பற்றி வெளியிடப்படும் சில தகவல்கள் உண்மைக்குப்புறம்பானவையாகவும் உள்ளன.

வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தநபர்களின் இறுதிச் சடங்குகளை வெகு துரிதமாக செய்ய வேண்டிய துரதிஷ்டவசமான சூழலிலேயே தற்போது நாம் இருக்கின்றோம்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் செயற்பட வேண்டிய முறை தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் முன்னரே அறிவித்துள்ளது.

மேலும் வைரஸ் பரவுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதனைத் தடுக்க நாம் முயற்சிப்போம். கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் உடல்களைப் புதைப்பதற்கு அதிக நேரம் எடுப்பதோடு இதற்குக் கூடுதலான மனித வளமும் தேவைப்படும்.

தற்போது காணப்படும் இக்கட்டான நிலவரத்தை எம்மால் கட்டுப்படுத்த முடியும். எனினும் நாம் எதிர்பாராத அளவு மரணங்கள் அதிகரித்தால் எம்மால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் போகும். உடல்களைத் தகனம் செய்யும் போது நாட்டின் நிலைமை தொடர்பில் ஆராய வேண்டும்.

நாட்டில் ஒவ்வொரு பிரதேசங்களிலும் வெவ்வேறு நிலைமைகளே காணப்படுகின்றன. எம்மால் ஏதாவது ஒரு பிரதேசத்தில் இடம்பெறும் சம்பிரதாயத்தைக் கூறி அதன் படி செயற்படுமாறு கூற முடியும். எனினும் முழு நாட்டுக்கும் ஒரே வழிமுறையை ஏற்படுத்துவது சிரமமாகும்.

நாட்டில் நீரின் அளவு உயர் மட்டத்திலேயே காணப்படுகிறது. அது மாத்திரமின்றி மண் உரத்தைக் கொண்டதாகவும் இருக்கிறது.

இவ்வாறிருப்பதால் வைரஸ் மண் மூலம் பரவக் கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. அவ்வாறிருப்பினும் நீர்கொழும்பில் காணப்படும் அதே நிலைமை மட்டக்களப்பில் காணப்படுவதில்லை.

மட்டக்களப்பில் காணப்படும் நிலைமை மாத்தறையில் காணப்படுவதில்லை. மக்களுடன் இணைந்தே எம்மால் இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இது மிக முக்கியமானதொரு விடயமாகும்.

எனவே நோயாளர் எந்த வைத்தியசாலையில் இருந்தாலும் அவர் உயிரிழந்தால் அருகிலுள்ள தகனசாலையில் தகனம் செய்வதே எமது எதிர்பார்ப்பாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# 142 குடும்பங்களைச்சேர்ந்த 182 பேர் வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்டனர்

(வவுனியா)

வவுனியாவில் 47 குடும்பங்களைச் சேர்ந்த 182 பேர் தனிமைப் படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று தீவிரமடைந்த நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசாங்கத்தால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு உள்ளிட்ட பகுதிகளில் கடந்த மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்து வசிக்கின்றமை, கொரோனா தொற்றுக்குள்ளான நபர்களுடன் தொடர்புகளை பேணியமை, வெளி மாவட்டங்களிலிருந்து வருகை தந்தமை, கொரோனா தொற்று அச்சம் உள்ள பகுதிகளுக்குச் சென்று வந்தமை உள்ளிட்ட நபர்களை உள்ளடக்கிய 47 குடும்பங்களைச் சேர்ந்த 182 பேர் சுய தனிமைப்படுத்தலுக்குள்ளாக்கப்பட்டதுடன், அவர்களை சுகாதாரத் துறையினரும், பொலிஸாரும் கண்காணித்து வருகின்றனர்.

குறித்த குடும்பங்கள் 14 நாட்கள் கண்காணிக்கப்பட்டவுள்ளன. (இ-250)

# நகர்ப்பகுதி வர்த்தக நிலையங்களுக்கு நடமாடும் சேவையில் ஈடுபட அனுமதி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர்ப்பகுதி வர்த்தக நிலையங்களை ஊரடங்கு வேளையில் நடமாடும் வியாபார சேவையில் ஈடுபடுத்த சாவகச்சேரி நகரசபை தீர்மானித்திருப்பதாக உப தவிசாளர் பாலமயூரன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரப் பகுதியில் அமைந்துள்ள பலசரக்கு வியாபார நிலைய உரிமையாளர்கள் தமது கடைகளிலு ள்ள அத்தியாவசியப் பொருட்களை எடுத்து நடமாடும் வியாபார சேவையில் ஈடுபட சாவகச்சேரி நகரசபை அனுமதி வழங்கியது.

அத்துடன் உள்ளூர் வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடத் தீர்மானித்துள்ளோம். உள்ளூர் வியாபார நிலையங்கள் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாததன் காரணமாகவே அவற்றை மூட தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் நகரசபை எல்லைக்குள் ஊரடங்கு மற்றும் ஊரடங்கு தளர்த்தப்படும் வேளைகளில் சிகரெட், புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

### தனிமைப்படுத்தப்படும் நபர்கள், நோயாளிகளின்

# இனத்தையோ மதத்தையோ குறிப்பிடுவதை ஊடகங்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்

(கொழும்பு)

தனிமைப்படுத்தப்படும் நபர்களின் அல்லது நோயாளர் களின் இனத்தையோ மதத்தையோ குறிப்பிடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பது உள்ளிட்ட 8 விடயங்களை

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் ஊடகங்கள் செய்திகளை அறிக்கையிடும் போது கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம் என சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு பரிந்துரைத்தது.

இந்தப் பரிந்துரைகளைப் பின்பற்றி செய்திகளை அறிக்கையிடுவதன் மூலம் அரசால் முன்னெடுக்கப் படும் வேலைத்திட்டங்களை மேலும் வெற்றியடைச் செய்ய முடியும் என்றும் அந்த அமைச்சு தெரிவித்தது.

இவ்விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில்,

கொரோனா வைரஸ் பரவும் இக் காலகட்டத்தில் அதற்கு முகம் கொடுக்க அரசால் முன்னெடுத்துச் செல்லப்படும் வேலைத்திட்டங்களுக்கு உதவிய எல்லா ஊடக நிறுவனங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ் வேலைத்திட்டத்தை மேலும் வெற்றி பெறச் செய்வதற்கு கீழ் வரும் பரிந்துரைகளுக்கு ஏற்ப ஊடக அறிக்கைகளை தயாரிக்க வேண்டும் என்று கோருகின்றோம், எப்போதுமே உண்மையும் உறுதிப்படுத்தப்பட்டதுமான ஆதாரங்களை மட்டும் பாவித்து அறிக்கைகள் தயார் செய்யப்பட வேண்டும்.

தனிமைப்படுத்தப்படும் நபர்களின் அல்லது நோயாளர்களின் இனத்தையோ மதத்தையோ குறிப்பிடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள நபர்களை நோயாளர்கள் என்று அறிமுகப்படுத்துங்கள். பிறருக்கு நோயைப் பரப்பும் நபர்கள் என்றழைப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

ஆபத்தின் பரிமாணங்களை விஞ்ஞான ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் அறிக்கையிட வேண்டும். பிறரின் தனிப்பட்ட கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

தனிமைப்படுத்தப்படும் நோயாளிகளினதும் நபர்களினதும் புகைப்படங்களையும் காணொலிகளையும் அவர்களின் அனுமதியின்றி வெளியிட வேண்டாம்.

இறந்தவர்களின் இறுதிக்கிரியைகளின் புகைப்படங்களையோ காணொலிகளையோ வெளியிடும் போது அவற்றை மங்கலாக்கி காண்பிப்பது சிறந்தது.

மக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தும் விதத்தில் அறிக்கையிடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்நிலையில் மக்களிடையே மன அழுத்தத்தையும் கோபத்தையும் ஏற்படுத்துவதைத் தவிர்த்து எதிர்காலத்தைப் பற்றி ஓர் ஆவல் மற்றும் ஒருவருக்கிடையே ஒத்துழைப்பை வளர்க்கும் விதத்தில் அறிக்கையிடுங்கள் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# இரணைமடு விமானப்படை முகாமிலிருந்து 172 பேர் நேற்றுக்காலை வீடு திரும்பினர்





(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடு விமானப்படை முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 172 பேர் நேற்று வீடு திரும்பினர். கடந்த 21ஆம் திகதி இந்தியாவிற்கு சுற்றுலா சென்று நாடு திரும்பியவர்களே இவ்வாறு இரணைமடு விமானப் படை முகாமில் தங்கவைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டனர்.

அவர்கள் குறித்த முகாமிற்கு அழைத்து வரப்பட்டு 14 நாட்கள் கடந்த நிலையில் நேற்றும் கொரோனா வைரஸ் தடுப்பு பரிசோதனைகள் இடம்பெற்றதையடுத்து விசேட பாதுகாப்பு மற்றும் வாகன வசதிகளுடன் அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

குறித்த 172 பேரில் ஒரு பிக்கு உட்பட 45 ஆண்களும், 147 பெண்களும் அடங்குகின்றனர்.

குறித்த நிகழ்வு நேற்றுக் காலை 8 மணியளவில் இரணைமடு விமானப்படை முகாமில் இடம்பெற்றது. இவர்கள் அனைவரும் இந்தியாவில் புத்தர் பிறந்த இடத்தைப் பார்வையிட்டு வழிபடுவதற்காக சுற்றுலாப் பயணிகளாகச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ஒரேநாளில் இத்தனை உயிரிழப்புக்களா?



## கொரோனாவால் திணறும் அமெரிக்கா

**(நியூயோர்க்)**

**அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு இலக்காகி நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் ஆயிரத்து 320 பேர் உயிரிழந்தனர்.**

சீனாவின் ஹுபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகம் முழுவதும் 200 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்குப் பரவியது.

கொரோனா வைரஸ் ஐரோப்பாவைத் தொடர்ந்து தற்போது அமெரிக்காவைப் புரட்டியெடுத்து வருகிறது.

உலகளவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் முதலிடத்திலுள்ள அந்நாட்டில் கடந்த சில நாட்களாக உயிரிழப்பின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்தது. இந்நிலையில் அமெரிக்காவில் கொரோனா வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 75 ஆயிரத்தைத் தாண்டியது.

அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரேநாளில் மட்டும் ஆயிரத்து 320 பேர் உயிரிழந்தனர். இதனால் அமெரிக்க மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். (இ)

## புடின் வழங்கிய மருத்துவ உபகரணங்கள் பலரது உயிரைக் காப்பாற்றும் - ட்ரம்ப்






(வோஷிங்டன்)

உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸ் கடந்த ஆண்டு டிசெம்பரில் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டது. குறிப்பாக அமெரிக்காவில் கொரோனா தற்போது கோரத்தாண்டவமாடி வருகிறது.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வைரஸ் தொற்று உயிரிழப்புக்களைக் கட்டுப்படுத்த முடியாமல் அமெரிக்கா திணறி வருகிறது.

இதற்கிடையில், போதிய மருத்துவ உபகரணங்கள் இல்லாமல் தத்தளித்துவந்த அமெரிக்காவுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உதவ முன்வந்தார்.

இதற்காக அதிநவீன மருத்துவ உபகரணங்களை ஏற்றிக் கொண்டு ரஷியாவிலிருந்து மிகப்பெரிய சரக்கு விமானம் அமெரிக்காவுக்கு புறப்பட்டது.

அந்த விமானம் கடந்த வியாழக்கிழமை அமெரிக்காவின் நியூயோர்க் நகரை சென்றடைந்தது. பின்னர் அங்கிருந்து நாட்டின் பல்வேறு வைத்தியசாலைகளுக்கு அந்த மருத்துவ உபகரணங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்நிலையில், ரஷிய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அனுப்பிய மருத்துவ உபகரணங்கள் பலரது உயிர்களைக் காப்பாற்றும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார். இது குறித்து வோஷிங்டனிலுள்ள வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த ட்ரம்ப் தெரிவிக்கையில்,

“அமெரிக்காவுக்கு மருத்துவ உபகரணங்களை ரஷிய ஜனாதிபதி புடின் அனுப்பியது மிகவும் நல்ல உபசரிப்பு. ரஷியா அளித்த உதவியை நான் வாங்காமல் வேண்டாம் நன்றி எனக் கூறியிருக்கலாம். அல்லது வாங்கிக் கொண்டு நன்றி என கூறியிருக்கலாம்.

புடின் மிகப்பெரிய விமானத்தில் அதிநவீன மருத்துவ உபகரணங்களை அனுப்பியுள்ளார். இந்த உபகரணங்கள் அமெரிக்காவில் பலரது உயிர்களைக் காப்பாற்றும். ஆகையால், நான் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## சீனாவில் நாய் மற்றும் பூனை இறைச்சி உண்பதற்குத் தடை





(பீஜிங்)

சீனாவில் உள்ள ஷென்சென் நகரம், நாய், பூனை இறைச்சியை உண்பதற்கும், விற்பனை செய்வதற்கும் தடை விதித்தது.

சீனாவில், கண்ட கண்ட உயிரினங்களின் இறைச்சியை எல்லாம் உணவிற்காக எடுத்துக்கொள்வது அந்நாட்டு மக்களின் பழக்கமாக இருப்பதால்தான், கொரோனா வைரஸ் உருவானதாக நம்பப் படுகிறது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்றுப் பாதிப்பிலிருந்து சீனா மீண்டு வரும் நிலையில், சீனாவில் உள்ள ஷென்சென் நகரம், நாய், பூனை இறைச்சியை உண்பதற்கும், விற்பனை செய்வதற்கும் தடை விதித்தது. இந்தத் தடை, மே முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வருகிறது.

நாய், பூனை இறைச்சிக்குத் தடை விதிக்கும் முதலாவது நகரம், ஷென்சென் தான். இம்முடிவுக்கு ஹயுமன் சொசைட்டி இன்டர்நேஷனல்’ என்ற விலங்குகள் நல அமைப்பு வரவேற்பு தெரிவித்தது. இதன்மூலம், சீனாவில் ஆண்டுக்கு ஒரு கோடி நாய்களும், 40 இலட்சம் பூனைகளும் கொல்லப்படுவது நிறுத்தப்படும் என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டியது. (இ)

## உலகையே உலுக்கிவரும் கொரோனாவைப் பற்றி அறியாத நாடுகள்

(சியோல்)

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் அச்சுறுத்திவரும் நிலையிலும் கொரோனாவைப் பற்றி அறியாத - கண்டு கொள்ளாத நாடுகள் பல உள்ளன.

கொரோனா வைரஸ் காரணமாக உலகின் பல்வேறு நாடுகள் நடுங்கி வரும் நிலையில், இந்த வைரஸ் காரணமாக ஒருவர் கூட பாதிக்கப்படாத நாடுகளும் உள்ளன என்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. உலகையே மிரட்டி வரும் கொடிய நோயாக கொரோனா வைரஸ் உள்ளது.

இந்த வைரஸ் தொற்று காரணமாக இதுவரை உலகம் முழுவதும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர்.

இதனால் இந்த வைரஸிடமிருந்து தப்பிப்பதற்கு பல்வேறு நாடுகள் போராடி வருகின்றன.

மனிதர்களிடமிருந்து இந்த நோய் எளிதாகப் பரவுவதால், விமான போக்குவரத்து மூலம் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிலிருக்கும் நபர்களை இந்த நோய் தாக்கிவிடுவதாக கூறப்படுகிறது.

அதன்பின் அந்த நோய் மெல்ல, மெல்ல குறிப்பிட்ட நாடுகளில் பரவி, இப்போது 200-இற்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், வடக்கு பசுபிக் கடற்பகுதியில் பலாவ் மொழி பேசும், சுமார் 18,000 மக்கள் தொகை கொண்ட சின்னஞ்சிறு நாடு பலாவ் தீவில், இதுவரை ஒருவருக்குக் கூட கொரோனா தொற்று பாதிப்பு ஏற்படவில்லை. இந்த நாட்டின் நாணயம் அமெரிக்க டொலர் ஆகும். பசுபிக் பிராந்திய நாடுகள் பலவும் கொரோனாவின் கொடூரத் தாக்கத்தில் சிக்கியுள்ளன.

இதேபோன்று சுமார் ஒரு இலட்சம் பேரை மக்கள் தொகையாக கொண்ட குட்டிநாடான டோங்காவும் கொரோனாவின் பிடியில் சிக்கவில்லை.

சாலமன் தீவுகள், மார்ஷல் தீவுகள், மைக்ரோனேசியா ஆகிய நாடுகளும் கொரோனா தாக்காத நாடுகளின் பட்டியலில் உள்ளன. ,வைதவிர அண்டார்டிகா கண்டமும் கொரோனாவால் பாதிக்கப்படவில்லை. அதேநேரத்தில் பசுபிக் கடலிலுள்ள வடக்கு மரியானா தீவுகள் நாடுகளில் முதலாவது கொரோனா பாதிப்பு அண்மையில் உறுதி செய்யப்பட்டது. பயணக் கட்டுப்பாடுகள் நிறைந்து இருப்பதால் தான் இந்தப் பகுதிகளில் எல்லாம் கொரோனா பரவவில்லை என்று கூறப்படுகிறது.

உலகின் மழைக்காடுகள் என வர்ணிக்கப்படும் அமேசன் காடுகளின் பெரும் பகுதி பிரேசிலில் தான் உள்ளது. இந்தக் காடுகளில் பல ஆயிரக்கணக்கான பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் வெளி உலகத் தொடர்பு அதிகம் இல்லாமல் தங்களுக்குத் தேவையான அத்தியாவசிய தேவைகளைத் தாங்களாகவே பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

இந்நிலையில், உலகையே உலுக்கி வரும் கொரோனா தற்போது அமேசன் காடுகளில் வாழும் மக்களிடமும் பரவத் தொடங்கியுள்ளது.

அமேசனின் கொகமா பழங்குடியின இனத்தை சேர்ந்த 20 வயது இளம் பெண்ணுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

உலக நாடுகளை உலுக்கியிருக்கும் கரோனா தொற்று நுழையாத ஒரு நாடு உண்டு என்றால் அது வட கொரியா என்று அறியப்படுகிறது.

வட கொரியாவில் தற்போது கொரோனா அறிகுறி மற்றும் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் என சுமார் 500 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர். கடந்த வார ஆரம்பத்தில் இது 2,280 ஆக இருந்த நிலையில், தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு கொரோனா அறிகுறி தென்படவில்லை என்று பலரும் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்நிலையில், வடகொரியாவில் இதுவரை ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்படவில்லை என்றும், எனினும், தொற்று ஏற்படாமல் தடுக்க பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அந்த நாட்டு அரசு தெரிவித்தது. (இ)

# ஒட்டுண்ணி எதிர்ப்பு மருந்தால் கொரோனாவை ஒழிக்க முடியும்

## மருத்துவ ஆய்வில் தகவல்

(மெல்பேர்ன்)

உலகம் முழுவதும் கிடைக்கும் ஒட்டுண்ணி எதிர்ப்பு மருந்தால் கொரோனா வைரஸை அழிக்க முடியும் என மருத்துவ ஆய்வில் தெரியவந்தது.


கொரோனா வைரஸ் உலகளவில் மிகப்பெரிய மனிதப் பேரழிவை ஏற்படுத்தியது. தற்போது இந்த நோய்க்கான தடுப்பூசியோ சிகிச்சையோ இல்லை. மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் பல்வேறு நாடுகளின் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் உலகளவில் கிடைக்கக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுண்ணி எதிர்ப்பு மருந்தான ஐவர்மெக்டின், கோவிட் -19 வைரஸ் தொற்றுக்கு எதிராக மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கண்டறிந்ததாக அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சி முடிவை வெளியிட்டனர்.

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் அமைந்துள்ள மோனாஷ் பல்கலைக்கழகத்தின் பயோமெடிசின் டிஸ்கவரி நிறுவனத்தின் தலைமையில் நடத்தப்பட்ட இந்த ஆய்வில், ஐவர்மெக்டின் என்ற மருந் தானது, சார்ஸ்- கோவ் 2 வைரஸை அழிக்கக் கூடும் எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

இதுபற்றி மோனாஷ் பல்கலைக்கழகத்தின் பயோமெடிசின் டிஸ்கவரி நிறுவனத்தின் விஞ்ஞானி கெய்லி வாக்ஸ்டாப் தெரிவிக்கையில்,

இந்த மருந்தின் ஒரு டோஸ் மூலம், அனைத்து வைரஸ் ஆர்.என்.ஏ. மூலக்கூறுகளையும் முழுமையாக 48 மணி நேரத்திற்குள்



அகற்ற முடியும் என்பதையும், 24 மணி நேரத்தில் கூட அதில் குறிப்பிடத்தக்க அளவு குறைவதையும் நாங்கள் கண்டறிந்தோம் .

வைரஸில் ஐவர்மெக்டின் மருந்து எவ்வாறு செயல்படுகிறது என்பது தெரியவில்லை என்றாலும், இந்த மருந்து வைரஸை அழிப்பதற்காக உயிரணு திறனைக் குறைக்கும்.

நாங்கள் ஒரு உலகளாவிய தொற்றுநோயை எதிர்கொண்டிருக்கின்றோம். இதற்கு அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சை இல்லை. இவ்வாறான காலங்களில், உலகெங்கிலும் ஏற்கனவே கிடைத்த ஒரு மருந்துக் கலவை எங்களிடம் இருந்தால், அது விரைவில் மக்களுக்கு உதவக்கூடும்.

தடுப்பூசி பரவலாகக் கிடைப்பதற்கு முன்னதாகவே இந்த மருந்து உதவியாக இருக்கும் என்று நம்புகின்றோம் என அவர் தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து அடுத்த கட்டமாக இந்த மருந்து மனிதர்களுக்கு கொடுக்கத் தகுந்த சரியான அளவை கண்டுபிடிக்க நடவடிக்கை மேற்கொண்டனர். மனிதர்களின் உடலுக்கு எந்தளவு மருந்து பாதுகாப்பானது என்று ஆராயப்பட்டு வருகின்றது.

ஐவர்மெக்டின் என்பது உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுண்ணி எதிர்ப்பு மருந்தாகும். இது எச்.ஐ.வி. தொற்று, டெங்கு மற்றும் இன்புளுவன்ஸா உள்ளிட்ட வைரஸ்களுக்கு எதிராகப் பயனுள்ளதாக இருக்கிறது எனக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# 67 தூதரகங்களுடன் அரசு ஆலோசனை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் விரைவாகப் பரவி வரும் தன்மை மற்றும் இலங்கைக்கு மீண்டும் திரும்ப முடியாத நிலைமை போன்ற காரணங்களால் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களின் பிரச்சினைகளை கவனத்திற் கொண்ட வெளிவிவகார அமைச்சு, வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களின் நல்வாழ்வுக்கும், பாதுகாப்புக்கும் வசதிகளை மேற்கொள்வதற்காக உலகம் பூராகவுமுள்ள 67 நகரங்களை மையமாகக் கொண்ட தூதரகத் தலைவர்களுடன் ஆலோசனைகளை நடத்தியதாக தெரிவித்தது.

இவ்விடயம் தொடர்பில் அந்த அமைச்சால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில்,

5 பிராந்திய மையங்களின் (தெற்காசியா, மத்திய கிழக்கு, தென்கிழக்கு ஆசியா மற்றும் கிழக்கு ஆசியா, ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா, வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பா) தூதரகத் தலைவர்களுடன் வெளிவிவகார செயலாளர் ரவிநாத் ஆரியசிங்க தலைமையில் இடம்பெற்ற தொடர்ச்சியான தொலைபேசி மாநாடுகளில், வைரஸ் தொற்று தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை வழிகாட்டல்களுக்கு அமைவாக வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

ஒட்டுமொத்தமாக, அனைத்து இலங்கைத் தூதரகங்களும் பெரும்பாலும் "வீட்டிலிருந்து பணிபுரிதல்" அடிப்படையில் பணியாற்றினாலும், அந்தந்த நிலையங்களிலுள்ள மாணவர் சமூகங்களுடனும், புலம்பெயர்ந்த தொழிலாளர்களுடனும் தொடர்ச்சியாக தொடர்புகளை மேற்கொண்டு வருவதுடன், தூதரக ஊழியர்களை இலகுவாக அணுகிக் கொள்ளக்கூடிய 24 மணி நேர அவசர தொலைபேசி அழைப்பு இலக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளன. (இ)

## கொரோனா வைரஸ் தொற்று

# சிகிச்சைக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்தவருக்கு சீனாவில் ஒன்றரை ஆண்டு சிறைத் தண்டனை!

(பீஜிங்)

வெளிநாடு சென்று திரும்பிய தகவலை மறைத்தது மட்டுமல்லாமல் கொரோனா வைரஸ் தொற்றைக் குணப்படுத்த- சிகிச்சைக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்த குற்றத்திற்காக சீனாவில் நபர் ஒருவருக்கு ஒன்றரை ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸ் கடந்த ஆண்டு டிசெம்பர் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்நாட்டிலும் 3 ஆயிரத்து 322 பேர் உயிரிழந்தனர்.

கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியது முதலே சீனாவில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. குறிப்பாக ஹூபேய் மாகாணம் முழுவதும் சீல் வைக்கப்பட்டது.

ஆனால், தற்போது நிலைமை சீரடைந்து வருவதையடுத்து கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. ஆனால், அங்கு அரசு விதித்த கட்டுப்பாடுகளை மீறிய பலருக்கும் சிறைத் தண்டனைகள் விதிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையே, சீனாவின் ஹேனன் மாகாணம் ஜெங்ஜோ நகரை சேர்ந்த ஜிய் கடந்த மார்ச் முதலாம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை வெளிநாடு சென்றுள்ளார்.

பின்னர் மார்ச் 7ஆம் திதி ஜிய் தனது சொந்த ஊர் திரும்பினார். ஆனால், தான் வெளிநாடு சென்று நாடு திரும்பிய தகவலை அவர் நகர அதிகாரிகளிடம் தெரிவிக்காமல் மறைத்துள்ளார்.

மேலும், கொரோனா அச்சுறுத்தலில் பாதுகாப்பாக இருக்க அரசு அறிவுறுத்திய சுய தனிமைப்படுத்தலையும் அவர் கடைப்பிடிக்கவில்லை. மாறாக வெளிநாட்டிலிருந்து திரும்பிய அடுத்த நாளே (மார்ச் -8) தனது அலுவலகத்திற்கு சென்றார்.

அலுவலகத்திற்கு சென்ற அவருக்கு மார்ச் 9 ஆம் திகதி காய்ச்சல், இருமல் உள்ளிட்ட கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகள் ஏற்பட்டன.

இது குறித்து தகவலறிய அப்பகுதி பொலிஸார் மார்ச் 10ஆம் திகதி ஜிய்யை தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சி செய்தனர்.

ஆனால், அவர் தொலைபேசி அழைப்பை ஏற்காமல் தனது தாயிடம் தொலைபேசியைக் கொடுத்துள்ளார். ஜிய்யின் தாய் தனது மகன் வெளிநாடு திரும்பிய தகவல் மட்டுமல்லாமல் மகனுக்கு ஏற்பட்ட கொரோனா அறிகுறிகள் குறித்த தகவலையும் பொலிஸாரிடமிருந்து மறைத்தார்.

இந்தச் சம்பவம் நடந்து சில நாட்களில் ஜிய்க்கு கொரோனா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. மேலும், அவருடன் நெருங்கிய தொடர்பிலிருந்த 40 பேரும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதையடுத்து,வெளிநாடு சென்று திரும்பிய தகவலை மறைத்தது, சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படாதது, கொரோனா அறிகுறிகள் இருந்த போது தானாக முன்வந்து சிகிச்சைக்கு ஒத்துழைப்பு வழங்காதது போன்ற குற்றங்களுக்காக ஜிய் மீது வழக்குத் தொடரப்பட்டது.

இந்நிலையில், இந்த வழக்கு மீதான விசாரணை நேற்று முன்தினம் வந்தது. அப்போது ஜிய் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் நிரூபிக்கப்பட்டன.

இதையடுத்து அவருக்கு ஒன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. (இ)

# 24 மணித்தியாலங்களில் மட்டும் ஊரடங்கு உத்தரவை மீறியதாக 1493 பேர் பொலிஸாரால் கைது



(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவை மீறிச் செயற்பட்டதாக நேற்றுக் காலை 6 மணி வரையான 24 மணித்தியாலங்களில 1,493 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 360 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

மேலும், கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் நேற்றுக் காலை 6 மணி வரை ஊரடங்கை மீறிய 12 ஆயிரத்து 223 பேர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ஜனாதிபதி செயலணிக்கான வர்த்தமானி நேற்று வெளியீடு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமையைக் கருத்திற் கொண்டு கொரோனா வைரஸ் தொற்றைத் தடுக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு மத்தியில் மக்களின் அன்றாட வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை ஜனாதிபதியின் விசேட செயலணி மேற்கொண்டு வருகிறது.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக அமைக்கப்பட்ட செயலணி குறித்து நேற்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில்,

கொரோனா வைரஸை இலங்கையிலிருந்து ஒழித்துக்கட்டும் போது அதிக நெருக்கடியான நிலையிலுள்ள கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி அப்பிரதேசங்களுக்கு கிராமியப் பிரதேச மற்றும் உற்பத்தியாளர்களால் வழங்கப்படும் உணவு விநியோகம் உடனடியாக நுகர்வோருக்குப் பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட ஒட்டுமொத்த மக்களும் வாழ்க்கையை உரியவாறு நடத்திச் செல்வதற்குத் தேவையான சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதை வழிநடத்துதல், கூட்டிணைத்தல் மற்றும் தொடராய்வு செய்வதற்காக இந்த ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டது. (இ)

# கொரோனா தடுப்பு மருந்து அமெரிக்காவில் கண்டுபிடிப்பு

## எலிக்கு நடத்திய சோதனை வெற்றி

(வோஷிங்டன்)

கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை அமெரிக்காவிலுள்ள பீற்றர்ஸ்பர்க் மருத்துவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளதாகவும், இதில் எலிக்கு நடத்திய சோதனை வெற்றியடைந்ததாகவும் தெரிவித்தனர்.

கொரோனா வைரஸ் நோய் வேகமாகப் பரவி வருவதையடுத்து அதைக் குணப்படுத்தும் மருந்துகளையும் தடுப்பு மருந்துகளையும் கண்டுபிடிக்க பெரும்பாலான நாடுகள் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இந்த நிலையில் அமெரிக்கா கொரோனா தடுப்பு மருந்து ஒன்றைக் கண்டுபிடித்தது.

அமெரிக்காவிலுள்ள பீற்றர்ஸ்பர்க் மருத்துவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இந்த மருந்தைக் கண்டுபிடித்தனர்.

பேராசிரியர் ஆன்ட்ரியோ கம்போட்டா, லூயிஸ் பாலோ உள்ளிட்டவர்கள் தலைமையிலான நிபுணர்கள் குழு இந்த மருந்தை உருவாக்கியது.

இதேகுழுவினர் கடந்த 2003 ஆம் ஆண்டு சார்ஸ் நோய்க்கும், 2014 ஆம் ஆண்டு மெர்ஸ் நோய்க்கும் மருந்து கண்டுபிடித்தனர்.

தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் சார்ஸ் மற்றும் மெர்ஸ் குடும்பத்தைச் சேர்ந்ததாகும்.



எனவே கடந்த கால மருந்து கண்டுபிடிப்பு முறையிலேயே நிபுணர்கள் குழு கொரோனாவுக்கும் மருந்து கண்டுபிடிக்க ஆய்வு நடத்தியது. அதில் அவர்கள் வெற்றியும் கண்டுள்ளனர்.

இந்தத் தடுப்பு மருந்தை எலிக்கு செலுத்தி பரிசோதித்தனர். அது வெற்றிகரமாக செயல்படுகிறது. அதாவது உடலில் கொரோனா வைரஸ் கிருமியை எதிர்த்துப் போராடும் ஆற்றலை உருவாக்கி அதை அழிக்கிறது. எனவே இந்த மருந்தை மனிதனுக்குப் பயன்படுத்தினால் நோய் தாக்குதலைத் தடுத்து விடலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

ஆனாலும் இன்னும் சில பரிசோதனைகள் நடத்த வேண்டியுள்ளது. முதலில் இந்த மருந்துக்கு அமெரிக்க உணவு மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பு, புதிய மருந்து ஆய்வு அமைப்பு ஆகியவற்றின் ஒப்புதல் பெற வேண்டும்.

இதற்காக விண்ணப்பிக்கும் பணியில் ஆய்வுக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர். ஒப்புதல் கிடைத்த பிறகு மனிதர்களுக்குச் சோதனை நடத்தப்படும். அதுவும் வெற்றி பெற்றால் தடுப்பூசி பயன்பாட்டுக்கு வரும் எனத் தெரிவித்தனர். (இ)

# ஊரடங்குச் சட்டத்தை மீறிய 105 பேர் மன்னாரில் கைது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 105 பேர் இது வரையில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 11 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# ஊரடங்கு உத்தரவை மீறுவோரை தடுத்து நிறுத்தும் பொலிஸ் ரோபோ

(துனிஸ்)

துனிசியாவில் ஊரடங்கு உத்தரவை மீறும் பொது மக்களை தடுப்பதற்காக ரோந்துப் பணியில் பொலிஸ் ரோபோக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

கொரோனா வைரஸ் உலக நாடுகளைப் புரட்டிப் போட்டுள்ளது. சமூக விலகலைக் கடைப்பிடித்தால் மட்டுமே கொரோனாவை கட்டுப்படுத்த முடியும் என்ற நிலை உள்ளது.

இதற்காக பல்வேறு நாடுகள் ஊரடங்கு உத்தரவை அமுல்படுத்தியுள்ளன. இதனையும் மீறிப் பொது மக்கள் பல்வேறு இடங்களில் தேவையில்லாமல் நடமாடுவதைக் காண முடிகிறது. அவர்களை ஒழுங்குபடுத்த பொலிஸார் படாத பாடு படுகின்றனர். இந்நிலையில், துனிசியா நாட்டின் தலைநகரில் ஊரடங்கு உத்தரவை பொதுமக்கள் கடைப்பிடிப்பதை உறுதி செய்வதற்காக ரோந்துப் பணியில் பொலிஸ் ரோபோக்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.

4 சக்கரங்கள் கொண்ட இந்த பொலிஸ் ரோபோக்கள் முக்கிய வீதிகளில் நிறுத்தப்பட்டுள்ளன. வெறிச்சோடிய வீதிகளில் யாராவது நடந்து வந்தால் அவர்களை இந்த ரோபோக்கள் தடுத்து நிறுத்தி கேள்வி கேட்கும். ஏன் வீட்டை விட்டு வெளியே வந்தீர்கள்? உங்கள் அடையாள அட்டையைக் காட்டுங்கள்? எனக் கேட்கும்.

உடனே அந்த நபர்கள் ரோபோவிலுள்ள கமரா முன்பு தங்கள் அடையாள அட்டைகள் மற்றும் பிற ஆவணங்களைக் காட்ட வேண்டும். இதன்மூலம் அதிகாரிகள் அவற்றை எளிதில் சரிபார்த்து தேவையான உத்தரவுகளைப் பிறப்பிக்க முடிகிறது. தேவையில்லாமல் மக்கள் வெளியே வந்து ஊரடங்கை மீறுவது தெரியவந்தால் பொலிஸார் அந்த இடத்திற்கு விரைந்து சென்று நடவடிக்கை எடுக்கின்றனர்.

பொலிஸ் ரோபோ பணியில் ஈடுபடும்போது எடுக்கப்பட்ட வீடியோ சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டது.

இந்த பொலிஸ் ரோபோக்களை இனோவா ரோபோடிக்ஸ் நிறுவனம் தயாரித்தது. இதேபோன்று வைத்தியசாலைகளில் பயன்படுத்தக்கூடிய ரோபோக்களையும் இந்த நிறுவனம் உருவாக்கியது. இதில் முதற்கட்டமாக ஒரு ரோபோ விரைவில் துனிஸ் நகரத்திலுள்ள வைத்தியசாலையில் செயல்பாட்டிற்கு வரும்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் அருகில் வைத்தியர்கள் சென்று நடவடிக்கை எடுக்கும்போது உடல்ரீதியாக ஏற்படும் தொடுதல் காரணமாக வைத்தியர்கள் மீதும் சில சமயங்களில் கொரோனா வைரஸ் தொற்றுகிறது.

மருத்துவக் கவனிப்புப் பணிகளுக்கு இதுபோன்ற ரோபோக்கள் பயன்படுத்தப்படுவதன்மூலம், வைத்தியர்களுக்கும் நோயாளிகளுக்கும் இடையிலான உடல் ரீதியான தொடர்பைக் குறைக்க உதவும் என்று இனோவா நிறுவன தலைமை விற்பனை அதிகாரி பர்ஹாட் கூறினார்.

துனிசியாவில் ஊரடங்கு உத்தரவு இரண்டாவது வாரம் நீடிக்கிறது. அங்கு இதுவரை 436 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. 14 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)



# யாழில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் திடீர் உச்சம்

## உடன் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அங்கஜன் அரச அதிபரிடம் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தற்போது ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுலிலுள்ள காரணத்தால் மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை பாரியளவு பாதித்துள்ளது. இதனால் மக்கள் அருகிலுள்ள கடைகளில் அல்லது நடமாடும் சேவை மூலம் தமது அத்தியாவசிய உணவு மற்றும் வேறு இதர பொருட்களை கொள்வனவு செய்யும் போது பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டுப்பாட்டு விலைகளிலும் பார்க்க மிக கூடுதலான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன என பலரும் முறைப்பாடு செய்துள்ளனர் என யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத்தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

இவ் அசாதாரண சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி யாழ். மாவட்டத்திலுள்ள சில மொத்த மற்றும் சில்லறை வியாபார நிறுவனங்கள், பலசரக்கு கடைகள், சதொசா கிளைகள், நடமாடும் வியாபார விநியோக சேவையினர் மற்றும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது ஒரு வியாபார உத்தியாக அத்தியாவசிய உணவுப் பொருட்களை அளவுக்கு அதிகமாக தமது களஞ்சியசாலைகளில் பதுக்கி வைத்து சந்தையில் செயற்கைத் தட்டுப்பாட்டின் மூலம் மக்கள் மத்தியில் பயப்பீதியை ஏற்படுத்தி இரட்டிப்பு விலைகளில் விற்பனை செய்ய முயற்சிப்பதாக பல முறைப்பாடுகள் கிடைக்க பெற்றுள்ளன.

அரசாங்கத்தின் நிவாரணத் திட்டத்தின் மூலம் முதியோருக்கான கொடுப்பனவு, மாற்றுத் திறனாளிகளுக்கான கொடுப்பனவு, விவசாய மற்றும் மீனவ ஓய்வூதியம் பெறுவோருக்கான கொடுப்பனவு, சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவு, சமூர்த்திப் பயனாளிகள் மற்றும் சமுர்த்தி தகைமை உள்ளோருக்கான கொடுப்பனவு என தலா 5000 ரூபாய் விசேட உதவித் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் இவ் அத்தியாவசிய உணவு பொருட்கள் நியாயமான விலையில் விற்றால் மாத்திரமே அரசாங்கத்தினால் வழங்கப்படும் 5000 ரூபாய் கொடுப்பனவு மூலம் இவர்கள் பயனடைவர்.

ஆனால் அத்தியாவசிய உணவு மற்றும் இதர பொருட்களின் விலைகள் அபரிமிதமாக அதிகரித்து விற்கப்படும் பட்சத்தில் இக் கொடுப்பனவு கிடைக்கப்பெறுபவர்களுக்கு அந்தக் கொடுப்பனவு அவர்களது அத்தியாவசிய உணவு தேவைக்குப் போதுமானதாக இருக்காது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்து கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்வோரை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகள் உடனடியாக அடையாளம் கண்டு உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலம் மக்களுக்கு நியாயமான விலைகளில் அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதற்கான வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனிடம் கோரிக்கை விடுத்தார். (இ)

# பிரிட்டனில் ஒன்பது நாட்களில் பிரம்மாண்ட வைத்தியசாலை

